அருளப்பர் முதல் நிருபம் 5:21

சிறுபிள்ளைகளே, விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்ளுவீர்களாக. ஆமென்.

கொரிந்தியர் 1 6:9-10

அநீதர்கள் சர்வேசுரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள மாட்டார்கள் என்று அறியீர்களோ? மோசம் போகாதேயுங்கள்: தூர்த்தரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரக் காரரும், (கலாத். 5:19; எபே. 5:5.) சிற்றின்பப்பிரியரும், ஆணும் ஆணுமாய் மோகிக்கிறவர்களும், திருடரும், பொருளாசைக்காரரும், குடி வெறியரும் உதாசினரும், கொள்ளைக்காரரும் சர்வேசுரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை.

உபாகமம் 13:4

நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரானவரை மாத்திரம் பின்பற்றி அவருக்குப் பயந்தவர்களுமாய் அவரு டைய கற்பனைகளை அநுசரிக்கிற வர்களுமாய் அவருடைய வாக் கியத்திற்குச் செவிகொடுக்கிறவர் களுமாய் அவருக்கு மாத்திரமே ஊழியஞ் செய்து அவரை அண்டிக் கொள்ளக் கடவீர்கள்.

எபேசியர் 5:11-12

பலனில்லாத இருள்களின் கிரியைகளோடு நீங்கள் கலவாதிருப்பதன்றியே, அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள். ஏனெனில் அவர்களால் இரகசியத்தில் செய்யப்படுகிறவைகளைச் சொல்லுகிறதும் வெட்கக்கேடாயிருக்கின்றது.

உபாகமம் 4:39

ஆகையால் உயர வானத் திலும் தாழ பூமியிலும் தேவனாகிய கர்த்தரே தேவன். அவரையல்லாமல் வேறொருவருமில்லையென்பதை நீ இன்று அறிந்து உன் இருதயத்தில் சிந்திக்கக் கடவாய்.

கொலோசியர் 3:5

ஆகையால் உங்களுடைய இலௌகீக அவயவங்களைச் சாகடியுங்கள். அவையாவன: விபசாரம், அசுத்தம், காமம், துர் இச்சை, விக்கிரக ஆராதனையாகிய பொருளாசை. ௴௴௴ 5. விக்கிரகங்களுக்கு அடிமைத்தனமாகிற பொருளாசை என்பதற்கு எபேசியர் 5-ம் அதிகாரம் 5-ம் வசனம் காண்க.

## ஷேஜாசுவாவின் திருவாகமம் 24:15

அல்லது கர்த்தரைச் சேவிக்கிற எங்களுக்கு ஆகாததாய் நீங்கள் கண் டால் உங்கள் இஷ்டப்படி செய் யுங்கள். உங்களுக்குச் சித்தமானால் மெசொப்பொத்தாமியாவில் உங்கள் பிதாக்கள் தொழுத தேவர்களை யாகி லும் நீங்கள் வாசம்பண்ணுகிற அமோறையர் தேசத்து விக்கிரகங் களையென்கிலுங் கும்பிட்டுச் சேவிக் கக்கூடும். நானும் என் வீட்டாரு மோ கர்த்தரையே சேவிப்போம் என்றான்.

## எபேசியர் 6:11

நீங்கள் பசாசின் தந்திர சற்பனைகளுக்கு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாய் இருக்கும்படிக்குச் சர்வேசுரனுடைய போராயுதங்களை அணிந்துகொள்ளுங்கள். ( உரோ. 13:12.)

## இசாயாஸ் ஆகமம் 54:17

உனக்கு விரோதமாய் முஸ்திப் புச் செய்யப்பட்ட ஆயுதம் உன்பால் பிரயோகமாகா; உனக்குத் தண்டனை விதிக்க எத்தனித்த நாவை நீயே கண்டனஞ் செய்வாய்; ஆண்டவ ருடைய தாசர்களுக்குச் சுதந்தரம் இதுவேயாகும்; அவர்கள் இங்ஙன மாக நீதியை நம்மிடங் காண்பார்கள் என்கிறார் ஆண்டவர்.

## ஓசே ஆகமம் 13:4

எஷஜிப்த்து தேசத்தினின்று உன்னை மீட்டு இரட்சித்த உன் தேவனாகிய ஆண்டவராயிருப்பது நாமே; நம்மையன்றி வேறு தெய்வந் தெரிந்துகொள்ளாதிருப்பாயாக! நமக்கு முன் உனக்கு வேறு இரட்சக ரில்லை (இசா.43:11).

## உரோமாபுரியார் 1 12:21

தின்மையானது உன்னை ஷெஜயிக்க விடாதே. ஆனால் நீயே தின்மையை நன்மையால் ஷெஜயிப்பாயாக.

## தீமோத்தேயு 1 6:10

ஏனெனில், பொருளாசை எல்லாத் தின்மைகளுக்கும் வேராயிருக்கிறது. சிலர் அப்படிப்பட்ட இச்சைக்கு இடங்கொடுத்து, விசுவாசத்தினின்று தவறி, பற்பல துன்பங்களில் சிக்கிக்கொண்டார்கள்.

## அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 17:15

தேவரீர் அவர்களை உலகத்தினின்று எடுத்துக்கொள்ளும்படிக்கு நான் வேண்டிக்கொள்ளாமல், தின்மையினின்று அவர்களைக் காப்பாற்றும்படி (வேண்டிக்கொள்ளுகிறேன்).

சங்கீதங்கள் 34:14

நான் (ஒவ்வொருவனை) என் உறவினனைப் போலவும், சகோதர னைப் போலவும் பாவித்து நடந்து (அவர்களுக்காகத்) துக்கித்துப் பிரலாபித்து இப்படியே கஸ்திப் பட்டுக்கொண்டிருந்தேன்.

கொரிந்தியர் 1 15:56

மரணத்தின் கொடுக்கு பாவந்தான், பாவத்தின் வீறோ நியாயப் பிரமாணமாம். (உரோ. 4:15; 7:13.) ழுழுழு 56. பாவத்தின் வீறு நியாயப் பிரமாணம் என்பதற்கு அர்த்தமாவது: நியாயப்பிரமாணமானது பாவத்தை விலக்குகிறபடியினாலே அதற்கு விரோதமாய்ச் செய்யப்படுகிற குற்றமானது பாவத்தின் தோஷத்தைக் கொண்டிருக்கிறது. அதைப் பற்றித்தான் பிரமாணம் பாவத்தின் வீறென்று அர்ச். சின்னப்பர் சொல்லுகிறார்.